முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,
முதன்மை சார்பு நீதிபதி.

வா.சா.1 தேதி. 02.06.2025

| OS.No. | 211/2023 | | |
|---|---|---|---|
| பெயர் | லதா | த/பெ. | வீரமணி |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தட்டச்சு செய்யப்பட்டது.

01.03.2023 ஆம் தேதியிட்ட தாவா 1ம் அயிட்ட சொத்து பொறுத்து கிழாய் கிராம அலுவலரால் வழங்கப்பட்ட சிட்டா மற்றும் அடங்கல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 12.09.1985 தேதியிட்ட தாவா 2வது அயிட்ட சொத்தினை கிழாய் மீனாட்சி சுந்தரம் என்பவரிடமிருந்து பிரதிவாதியின் தாயார் கிரயம் பெற்ற ஆவணம் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 18.09.1985 தேதியிட்ட ராஜேந்திரன் என்பவருக்கு பிரதிவாதிகளின் தாயார் கிரயம் செய்து கொடுத்த ஆவணம் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 22.03.1994 தேதியிட்ட 1, 2 பிரதிவாதிகளின் தாயர் கிழாய் வேணுகோபால் பிள்ளை அவர்களிடமிருந்து கிரயம் பெற்ற ஆவணம் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 24.09.2018 தேதியிட்ட ராசாயாள் என்பவரின் இறப்பு சான்றிதழ் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 27.08.2021 தேதியிட்ட இறந்துபோன ராசாயாள் என்பவரின் வாரிசு சான்றிதழ் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 06.03.2023 தேதியில் 1, 2,3 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு **வா.சா.ஆ.7**ஆக குறியீடு செய்யப்படுகிறது.08.03.2023 தேதியில் 1, 2, 3 பிரதிவாதிகள் பெற்றக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதிகளின் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.